# சட்ட பீடம்

## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

தபால் பெட்டி இல. 1490, குமாரதுங்க முனிதாஸ மாவத்தை, கொழும்பு - 3 இலங்கை

தொலைபேசி இல: 0094 11 2500942
பீடாதிபதியின் நேரடித் தொலைபேசி இல.: 0094 11 2502001
பிரதிப் பதிவாளர் சட்ட பீடம்: 0094 11 2590556


நவம்பர் 1, 2017

அன்பார்ந்த மாணவர்களே,

வாழ்த்துக்கள்! கௌரவம் மிக்க கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தில் நான்கு வருட சட்டத்துறை பட்டப்படிப்பு கற்கை நெறியினை கற்பதற்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். இது தொடர்பாக, கற்கைநெறி ஆரம்பத் திகதிகள் மற்றும் பின்வரும் செயற்பாடுகள் குறித்து கவனத்திற் கொள்க. அனைத்து செயற்பாடுகளும் கொழும்பு-07, பிலிப் குணவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள சட்ட பீடத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன. **மாணவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிகழ்வுகளுக்கும் வருகை தருதலும் மற்றும் பங்கேற்றலும் கட்டாயமானதாகும்.**

**நவம்பர் 16, 2017, காலை 9.00 மணி முதல்** - 2017/2018 கல்வி ஆண்டுக்கான மாணவர்களைப் பதிவு செய்தல்.

**நவம்பர் 16, 2017, காலை 9.00 தொடக்கம் 12 மணி வரை** – பெற்றோர் கூட்டம்
பெற்றோர்கள் குறித்த வளாகத்தினுள் காலை 9.00 மணிக்கு முதல் வருகை தருதல் கட்டாயமானதாகும். **ஒரு மாணவருடன் பெற்றோர் அல்லது இரண்டு பாதுகாவலர்கள் மாத்திரமே பெற்றோருக்கான கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப் படுவார்கள்.** இக் கடிதத்துடன் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள 'விசேட அனுமதிச்சீட்டு' கட்டாயமாக உங்களுடன் எடுத்து வரப்பட வேண்டும் என்பதுடன் மண்டப நுழைவாயிலில் ஒப்படைக்கப்படவும் வேண்டும்.

**பதிவுச் செயல்முறை மற்றும் பெற்றோர் கூட்டத்தின் பின்னர் மாணவர்கள் வீடுகளுக்கு (பல்கலைக்கழக விடுதிகளுக்கு அல்ல) திரும்பிச் செல்ல வேண்டும் என்பதை கவனத்திற் கொள்க.**

**நவம்பர் 20, 2017, காலை 9.00 மணி முதல்**- பல்கலைக்கழக கற்கை நெறிக்கு நெறிப்படுத்துகை நிகழ்வானது வரவேற்பு வைபவத்துடன் ஆரம்பமாகிறது. நெறிப்படுத்துகை நிகழ்வானது நவம்பர் 30, 2017 வரை தொடரவுள்ளது.

**நவம்பர் 20, 2017, மதியம் 2.00 – 4.00 மணி வரை – ஆங்கில தகுதிகாண் பரீட்சை** நடைபெறும்.

பல்கலைக்கழக விடுதி அனுமதி வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் தத்தமக்கு வழங்கப்பட்டதான விடுதிகளுக்கு நவம்பர் 20, 2017 மாலை 4.00 மணிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

**டிசம்பர் 4, 2017 - விரிவுரைகள் ஆரம்பம்.**

சட்ட பீடத்தில் பெறுமதி மிக்கதான காலம் அமைய வேண்டுமென இத் தருணத்தில் வாழ்த்துகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

கலாநிதி. சாந்தி செகராஜசிங்கம்
வணிகச் சட்டத் துறைத் தலைவர், நெறிப்படுத்துகை அமைப்பு 2017 சார்பாக
சட்ட பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்